**நோயிலிருந்து மீள்வதற்கான கொவிட் -19 தடுப்பூசி பதிலளிப்பு செயற்திட்டம் - 2021 ஆகஸ்ட் 19 தொடக்கம் 2021 திசெம்பர் 31 வரை**

---

நோயிலிருந்து மீள்வதற்கான கொவிட்-19 தடுப்பூசி பதிலளிப்பு செயற்திட்டத்தின் 2021 ஆகஸ்ட் 19 தொடக்கம் 2021 திசெம்பர் 31 வரையான முதலாது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2021 யூலை 09 ஆம் திகதிய முறையே 4083-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க மற்றும் 4084-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் 4.02 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டக் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், சுகாதார அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுடன் இணைந்து சுகாதார அமைச்சு செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. வழக்கமான தடுப்பூசி சேவை மற்றும் ஏனைய சுகாதார சேவைகளை விட்டுக்கொடுக்காமல் கொவிட்-19 இற்கு எதிராக இலங்கையின் முன்னுரிமை மக்களுக்கு பாதுகாப்பான தடுப்பூசி போடுவதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 32,370 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 161.85 மில்லியனானதுடன் அதில் ரூபா 30,000 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 150 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. ரூபா 2,370 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2021 ஆகஸ்ட் 19 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

---

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வுக்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வுக் காலப்பகுதிக்கான கடப்பாட்டு கட்டணம் மற்றும் வட்டி ரூபா 17 மில்லியனாகும். எனினும், இந்தத் தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் கடப்பாட்டு கட்டணம் மற்றும் வட்டியை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடப்பாட்டு கட்டணம் மற்றும் வட்டி என்பன நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றம்

இலங்கை அரசாங்கமும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் 2021 யூலை 09 இல் இச் செயற்திட்டத்திற்காக ரூபா 30,000 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 150 மில்லியன் தொகைக்கான கடன் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்ததுடன் 2024 யூன் மாதத்தில் பூர்த்தி செய்வதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இலங்கை சனத்தொகையில் 18.2 சதவீதமானோரின் தடுப்பூசி கிரயத்தை மேவுகை செய்வதற்கும், தடுப்பூசி தொடர்பான கண்காணிப்பு முறைமைகளிற்கு உதவுதல், cold chain தொடர்புடைய போக்குவரத்து வசதிகள், பாலின சமத்துவத்தையும் உள்ளடக்கியதையும் உறுதிப்படுத்துவதற்கும் கொவிட்-19 மற்றும் தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய மருத்துவ கழிவு முகாமைத்துவ முறைமையை

வலுப்படுத்துவதற்குமான நடவடிக்கைகள் என்பவற்றிற்கு இந்தக் கடன் தொகை பயன்படுத்தப்படவுள்ளது. எனினும் ரூபா 3,600 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 18 மில்லியன் மாத்திரமே மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட கொவிட் -19 தடுப்பூசிகளுக்காக பயன்படுத்தப்பட்டது.

## 3.2 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் பிரகாரம் கடன் உடன்படிக்கை இல. 4084 இன் கீழ் 2021 இல் எதிர்பார்க்கப்படும் மொத்தப் பணவளிப்பு ஐ.அ.டொலர் 5 மில்லியன் ஆக காணப்பட்ட போதிலும் 2021 ஆம் ஆண்டில் எந்தப் பணமும் வழங்கப்படவில்லை. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் முதலீட்டு கூறின் கீழ் எதிர்பார்த்த செயலாற்றல் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு 2022 இல் நிறுவப்பட்டதிலிருந்து மேலே விபரிக்கப்பட்டவாறு 2022 இல் மாத்திரமே விநியோகச் செயற்பாடு தொடங்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை திட்டமிட்டவாறு அமுல்ப்படுத்த வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம் முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை மேற்கொள்வதற்கும், செயற்திட்டத்தை செயற்திறனாக அமுல்ப்படுத்துவதற்கும் செயற்திட்ட நடவடிக்கைகளிற்கு உள்ளக கணக்காய்வு தேவைப்பட்டது. எவ்வாறாயினும், இதற்கான பொறிமுறை 2022 மே 09 வரை உருவாக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தில் தேவையான கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சுகாதார அமைச்சின் உள்ளக கணக்காய்வுக்கு நாங்கள் கோரியிருந்த கணக்காய்வு உத்தியோகத்தரிற்கான பதவியணி அங்கீகாரம் எங்களிற்கு கிடைக்கவில்லை. | உள்ளக கணக்காய்வை நடாத்துவதற்கான முறைமையொன்று உருவாக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |